உ

சிவமயம்.

ஸ்ரீமேலைச் சிதம்பரமாகிய திருப்பேரூர் பச்சைநாயகியா ரூசல்.

இஃது

கோயமுத்தூர் வித்துவான்

மகா-ள-ள-ஸ்ரீ,

கந்தசாமி முதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

ருசிரபுரத் தமிழ்ச்செல்வன்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

நந்தன ௵ ஆவணி ௴

இவை

இந்நூலாசிரியர் குமாரர்

மகா-ள-ள-ஸ்ரீ

சுப்பிரமணிய முதலியாரவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ பேரூர் பச்சைநாயகியாரூசல்.

காப்பு.

சீர்பூத்த பட்டிவினாயகர்தாள் போற்றிச்
சிவசுப்ரமண்யர்பதம் சிரத்திற்போற்றி
நார்பூத்த நம்பியாரூரர்ப்போற்றி
நாவினுக்கு மன்னரடி நளினம் போற்றி
ஏர்பூத்த சீகாழிக்கிறையைப்போற்றி
எழில்வாத வூரடிகளிணைத்தாள்போற்றிப்
பார்பூத்த பச்சைநாயகியார்மீது
பாடுவோமூசலொரு பத்துந்தானே.

நூல்-ஊசல்.

திருமருவு வேதாகமங்கள்வாழத்
திருநீறு மைந்தெழுத்துஞ் சிறந்துவாழக்
குருமருவு மெய்யடியார் கூட்டம்வாழக்
கோதிலாத்தமிழ்வேதங் குலவிவாழ
வுருமருவு மக்கமணி யுயர்ந்துவாழ
வுலகனைத் துஞ் சிவசமய மோங்கிவாழத்
தெருமருவு பேரைநகர்ப்பட்டிநாதர்
தேவி பச்சைநாயகியாராடி ரூசல் (க)

முன்பாலாழியிற் பாலன் உய்யப்பூசை
முற்றியமால் மார்பகத்தாட் டயர்ந்தாற்போலப்
பொன்பயிலும் ரத்நமணி மண்டபத்தே
பொற்பிலகுஞ் சிற்பநூற் புலவர்செய்து
மின்பயிலு நவரத்ந கசிதமாக
விளங்கிய பொன்னூசலிடைவீற்றிருந்து
தென்பேரூர் நகர்க்கிறைவர் பட்டிநாதர்
தேவிபச்சை நாயகியா ராடி ரூசல் (உ)

11 JAN 1920

மங்கலசோபனமியம்பத் தேவமாதர்
வாழ்த்திசைப்பக் கின்னரகிம்புருடமாதர்
தங்குநடனம்புரிய வரம்பைமாதர்
சாமரைகள் புடையிரட்டச் சேடிமாதர்
செங்கமலை வெண்கமலை வடந்தொட்டாட்டச்
செயசெயவென்றிந்த்ராணி வடந்தொட்டாட்டத்
திங்கடவழ் மதிற்பேரூர்ப்பட்டிநாதர்
தேவிபச்சை நாயகியாராடிரூசல். (௩)

சந்திரனை வென்றிலகு வதனமாடத்
தடநெடுங்கண்ணொடு செவிகடாம்போராட
எந்தவுலகுந் தருமாலிலையுமாட
இல்லையுண்டென்றோது மியலிடையுமாடப்
பந்தமறுத்தருணல்கும் பதங்களாடப்
பலமுனிவர் கொண்டாடிப்பாடியாடச்
செந்திருவாழ் பேரைநகர்ப்பட்டிநாதர்
தேவிபச்சை நாயகியா ராடிரூசல். (௪)

சோடிணைசேர் சிரப்பணியின் தொகைகளார்ப்பத்
தோளணியுமார்பணியுந் துவன்றியார்ப்பச்
சூடகமும் வால்வளையுங் கரத்திலார்ப்பத்
துய்யமேகலைகாஞ்சி மருங்கிலார்ப்பப்

பாடகமுநூபுரமும் பதத்திலார்ப்பப்
பல்லியஞ் சங்கீதவொலி பரவியார்ப்பத்
தேடரியபுகழ்ப் பேரூர்ப்பட்டிநாதர்
தேவிபச்சை நாயகியாராடிரூசல். (௫)

நடைமலியும் வன்றொண்டர்க்கருளவேண்டி
நண்பருடனெண்பயிலும் விளையாட்டாலே
முடைமலியுங் கடைசியரா வுருவுமாறி
முளைத்தபசு நெற்பயிரின் முடியைப்பற்றி
கொடைமலியும் அறம்வளர்த்த திருக்கையாலே
கோதற்ற நடவுதொழில் குயிற்றுநின்ற
மடைமலியும் வயற்பேரூர்க் கரசியான
மரகதவல்லித் தாயாராடிரூசல். (௬)

சீதரனைப்பாம்பாகச் சபித்தவாறும்
சிலைமதனை யுடலழியச் சபித்தவாறும்
தாதைதக்கன் மகஞ்சிதையத் தெரித்தவாறும்
தாருகனை மயிடனைச்சங்கரித்தவாறும்
பூதலமுமீதலமும் படைத்தவாறும்
போந்தவழிமீட்டுமவை துடைத்தவாறும்
வாதமறக்கட்டியர் கட்டியங்கள்கூற
மரகதவல்லித் தாயாராடிரூசல். (௭)

முச்ச கமும்பேணியறம் வளர்த்தசீரும்
மூ வருக்குங்குணம்பிறப்பாய் முடிந்தசீரும்
அச்ச மற அபயகரமருளுஞ் சீரும்
அ ருங்காலத் தம்புலிவானழைத்தசீரும்
கொ ச்சைமகன் பாடிடப்பால் கொடுத்தசீரும்
கொழுநனுடல் செம்பாதி கொண்டசீரும்
மச் சவிழி மடமாதர்பாடியாட
ம ரகதவல்லித் தாயாராடிரூசல். (௮)

பண மசுவை மனிதர்முகம் பண்ணும்பேரூர்
 றப்பிற்றவத்தோர்க்கே நண்ணும்பேரூர்
தண ரியபவமோகம் நீக்கும்பேரூர்
தவமியற்றிற் சிறிதுபெரிதாக்கும்பேரூர்
து ணிவிலர்க்குஞ் சிவஞானங்கொடுக்கும்பேரூர்
சுமதிமுதலியர் பவமுங்கெடுக்கும்பேரூர்
ம னிகொழிக்குந் திருக்காஞ்சி நதிவாய்ப்பேரூர்
மரகதவல்லித் தாயாராடிரூசல். (௯)

தே னைநிகர் பண்மொழியாராடிரூசல்
தென்பேரை நகருடையாராடிரூசல்
சேனைமலி திருவுடையாராடிரூசல்
சிவகாம சுந்தரியாராடிரூசல்

ஆனைமுகற் கொருதாயாராடிரூசல்
ஆறுமுகன் றிருத்தாயாராடிரூசல்
மானைமருட்டிய விழியாராடிரூசல்
மரகதவல்லித் தாயாராடிரூசல்.

திருப்பேரூர்
பச்சைநாயகியாரூசல்

முற்றிற்று

——:o:——